# தமிழ்நிலம்

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

கிழமை இதழ்

தொகுதி - 2 | தி.பி. 2015 . துலை 12 (28-10-84) 65 காசுகள் இதழ் எண் : 47 | பகுதி 43-4


# தமிழகத்தில் ஒடுக்கப்படுவோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தனி இயக்கம் தோன்றியது!

## சென்னையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழக அலுவலகத்தில் கூடிய பல்வேறு உரிமை இயக்கங்கள் கலந்து எடுத்த முடிவு!

சென்னை . 25 இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்களின் உண்மையான, சட்டப்படியான-உரிமைகள் மேன்மேலும் மறுக்கப்படுகின்றன. உரிமைக்காகப் போராடுபவர்கள் மீது கடுமையான கறுப்புச் சட்டங்களும், பொய் வழக்குகளும், அடக்குமுறைத் தாக்குதல்களும் தொடுக்கப் படுகின்றன.

படர்ந்து வரும் "பாசிசத்தின்" அறிகுறியாக உடனடிச் சட்டங்களும், பாதுகாப்புச் சட்டங்களும், தனியாக அமைக்கப்படும் அறமன்ற நடவடிக்கைகளும் உசாவலின்றிக் காவலில் வைக்க அதிகாரிகளுக்கு அனைத்து அதிகார உரிமைகள் விரைவாகச் செயலாக்கப் படுகின்றன. வறுமையின் கொடுமையில் சிக்கிக் கிடக்கும் மக்கள் சுரண்டப் படுகிறார்கள். அம் மக்களுடைய மறுவாழ்விற்காகவும், குடியரசு உரிமைகளுக்காகவும், போராடும் இயக்கங்களையும், நாட்டுப் பற்றாளர்களையும் 'இட்லர்' பாணியில் நடுவண், மாநில அரசுகள் ஒடுக்குகின்றன.

அயலக, இந்திய மூல முதலீட்டுக் கோட்டைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்கள் விழிப்புணர்வு - பெறுவதையும், போராட்டங்களையும் தடுப்பதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகளைக் கையாளுகின்றனர்.

இதனை இனங்கண்டு கொண்டு போலிக் குடியாட்சியின் முகத் திரையைக் கிழிக்க மக்கள் விழிப்புணர்வுடன் மாற்றுக் குமுகாய அமைப்புக்காகப் போராட வந்துள்ள இயக்கங்களையும், சிந்தனையையும் கூட இன்று கடுமையாக, சட்டத்திற்கு மாறாக அடக்குமுறை ஏவிவிடப்பட்டு எண்ணற்ற நாட்டுப் பற்றாளர்கள் சிறைகளில் வாடுகின்றனர்.

கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள கொடிய குடியாட்சிக்கு மாறான அடக்குமுறைச் சட்டங்களை எதிர்க்கவும்,

உண்மையான குடியாட்சி மக்களுக்குக் கிடைக்கவும்,

சிறையில் வாடும் நாட்டுப் பற்றுமிக்க அரசியல் சிறையாளிகளின் விடுதலை வேண்டியும், இன்னும் நாட்டில் நடக்கும் பல்வேறு அரசியல், குமுகாய, இன, கலை, இலக்கிய அடக்குமுறைகளை வெளிப்படுத்தியும் போராட வேண்டிய உடனடித் தேவையை உணர்ந்த பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள் 15.10.84 மாலை 6.00 மணி அளவில் சென்னை வாலாசா சாலையிலுள்ள உ.த.மு.க அலுவலகத்தில் ஒன்று கூடினர்.

பல்வேறு கருத்துரைகளின் முடிவில், "ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு" என்னும் இயக்கம் அமைக்கப் பட்டது.

மீண்டும், 19.10.84 ஆம் பக்கல் மேற்படி அலுவலகத்திலேயே கூடி இவ்வமைப்பின் செயல் திட்டங்கள் பற்றியும், நோக்கங்கள் பற்றியும் கலந்தாய்ந்தனர்.

25.10.84 ஆம் பக்கல் மாலை 6.00 மணி அளவில் மீண்டும் உ.த.மு.க அலுவலகத்தில் கூடி, இவ் வமைப்பின் பொறுப்பாளர்களைப் பின்வருமாறு அமர்த்தினர் : அமைப்பாளராக திரு. பி.வி. பக்தவச்சலம் (தலைவர், மக்கள் உரிமைக் கழகம்) அவர்களையும், செயலாளராக திரு. பரமேசுவரன் (தலைவர், மக்கள் மறுமலர்ச்சிமன்றம்) அவர்களையும், பொருளாளராக பாவலரேறு பெருஞ்சித்திரனார் (முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்) அவர்களையும் அமர்த்தி, குழு உறுப்பினர்களாகக் கலந்து கொண்ட அரசியல் மற்றும் சாதித் தொடர்பற்ற இயக்கங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் படிநிகராளி ஒவ்வொருவரை அமர்த்தியது.

இவ்வமைப்பில் சேர்ந்துள்ள இயக்கங்கள் வருமாறு :

1. மக்கள் உரிமைக் கழகம், 2. உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், 3. மக்கள் குடி உரிமைக் கழகம், 4. மக்கள் பண்பாட்டு மையம், 5. சோசலிசுட் தொழிலாளர் சங்கம், 6. மக்கள் சனநாயக உரிமைக் கழகம், 7. மக்கள் நல சனநாயகம், 8. அறிவியக்கப் பேரவை, 9. மக்கள் கலை இலக்கியக் கழகம், 10. முற்போக்கு இளைஞர் அணி, 11. பெரியார் சம உரிமைக் கழகம், 12. தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர் விடுதலை இயக்கம், 13. பகுத்தறிவு சமதரும இயக்கம், 14. தமிழ்நாடு உழைப்பாளர் பொது நலக் கட்சி, 15. தமிழர் முன்னேற்றக் கழகம், 16. பாரதீய மக்கள் நல உரிமைக் கழகம்.

இக் கூட்டமைப்பின் சிறப்பான அமைப்பு மாநாட்டினை சென்னையில் வரும் 11.11.84 இல் நடத்துவது என்றும், கூட்ட இறுதியில் தீர்மானிக்கப் பெற்றது. 0

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, [illegible]வியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

# மக்கட் பகை அரசை நீடிக்க விடலாமா?

செல்வர்களும், நிலக்கிழார்களும், முதலாளிகளும் கொள்ளையடிக்கும் போது சினம் அடைகிறோம்!

வட்டிக் கடைக்காரர்களும், வாணிகர்களும் ஏமாற்றம் செய்யும் போது ஆற்றாமைப் படுகிறோம்!

சாதி, மத, இன வெறியர்கள் மக்களைப் பிளவுபடுத்தி, மோதவிட்டு மக்களகுருதி குடிக்கும் போது உள்ளக் கொதிப்படைகிறோம்!

அருவருப்பான, தான்தோன்றித்தன வன்முறை, பண்பாட்டுக் கேடுகளால் மாணவர்கள் - இளைஞர்கள் சீரழியும் போது மனத் துன்பம் அடைகிறோம்!

இவை நேர்மையே! போலிப் பொதுமையர்களும், முதலாளியச் சீர்திருத்தவாணர்களும்கூட இவற்றுக்கு எதிராக எப்போதேனும் குரல் எழுப்புகின்றனர்.

ஆனால், அக்கறையுடனும், ஆழமாகவும், தொகுப்பாகவும் பார்க்கத் தவறுவதால், பரந்துபட்ட மக்களில் பலரும், தம் கண்ணுக்கு முன்னமேயே நடக்கும் சில கொடுமைகளின் உண்மைகளை அறிவதில்லை.

சிலர் தெரிந்தும் அமைதியாய் இருக்கிறார்கள்! முதலாளியச் சீர்திருத்தவாணர்களும, போலிப் பொதுமையரும் வேண்டுமென்றே இவற்றை மூடி மறைக்கின்றனர்! சிக்கல்களைத் திசை திருப்பி மக்கள் அறியாதவாறு செய்கின்றனர்.

இதை நீங்கள் பார்க்க வில்லையா?

எந்தவோர் ஏமாற்றுக் குழுவையும் விட, மிகப் பெரிய ஏமாற்று, கொலை, கொள்ளை, சாதி மத இன வெறி, பண்பாட்டுச் சீரழிவு நிறுவனமே அரசுதான்!

நெறியறம் (நீதி), ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைப் பேணுவதாகக் கூறிக்கொள்ளும் அதிகார வகுப்பு - படை, காவல், வழக்குமன்றம், சிறைச்சாலைகளைக் கொண்டிருக்கும் அரசுதான், அவற்றுக்கு நேர் எதிரான மிகப்பெரும் நிறுவனம்! மதச் சார்பின்மை, மக்கள் நாயகம், சமநெறி ஆகியவற்றின் அடிப்படையிலான குடியரசாகத் தன்னைப் பறைசாற்றியுள்ள அரசுதான், இக்கொள்கைகளுக்குக் குழிதோண்டும் தனிப்பெரும் நிறுவனமாகும்.

அரசின் அன்றாடச் செயல்பாடுகளே இந்த உண்மைகளை அம்பலக்காட்சியால் விளக்கும்.

**அரசு ஒரு தனிப்பெரும் சுரண்டல் நிறுவனம் :**

அரசு, பேருந்து, சரக்குந்துப் போக்குவரத்துக் கழகங்கள் நடத்துகிறது. பல தவணைகளில் தன் விருப்பம் போல் கட்டணங்களை உயர்த்திக் கொள்கிறது.

அரசு, தொடர்வண்டி, அஞ்சல் தொலைவரி நிறுவனங்களை நடத்துகிறது. ஆண்டுதோறும் கட்டணங்களை உயர்த்திக் கொளகிறது.

அரசு மின்வாரியம் நடத்துகிறது. அளவி வாடகை, மற்றும் மின் சட்டணங்களைத் தன் விருப்பப்படி ஏற்றிக்கொள்கிறது.

இரும்பு, எஃகு, நிலக்கரி, வேதிய உரம், மருந்து, மின்னனு, தொலைபேசி, தொலைக்காட்சி, ஒளிப்படச் சுருள், பால், உரட்டி, முதலான அனைத்து ஆக்கத் துறைகளிலும் முற்றுரிமையாக இருந்து கொள்ளையடிக்கிறது! 'பொதுத்துறை' 'அரசுடைமை' 'நாட்டுடைமை' என்று சொல்கிறது. ஆனால் இவற்றால் மக்களுக்கு நன்மை விளைவதில்லை! இந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் நன்மை விளைவதில்லை! அதிகார வகுப்பு ஊதிப் பெருக்கவே இவை உதவுகின்றன.

கூட்டுறவுகள் கூட்டுக் கொள்ளை நிறுவனங்களாகியுள்ளன. எந்தக் கூட்டுறவிலும் பங்காளர்கள் தேர்ந்தெடுக்கப் படுவது இல்லை. அமர்த்தப்பட்ட அதிகாரிகளின், ஊழல் கையூட்டுகள் பட்டுமே நடந்து வருகின்றன.

அரசு, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் நடத்துகிறது, அதிலும் 'ஆதாய வேட்டை மட்டுமே ஆடுகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அஞ்சல்வழிக் கல்வியில் மட்டும் ஆண்டுதோறும் இரண்டுகோடி உருபா நிகர ஆதாயம் கிடைக்கிறதாம்.

பால், மீன், முட்டை, கறி இவற்றை மலிவு விலைக்கு மக்களுக்கு வழங்குவதாக நிறுவனங்கள் தொடங்கினர். தொடக்கத்தில் மலிவாக இவற்றைத் தந்தார்கள். இப்பொழுதோ 50 மில்லி சூடான பால் 75 காசு; 50 மில்லி இனிப்புத் தயிர் ஓர் உருபா; 100 மில்லி குளிர்ந்த பால் உரு 1.20. தேநீர்க் கடைக்காரனும், கறிக்கடைக்காரனும் கூட இரக்கமுள்ளவனாய் இருப்பானோ என அய்யம் எழுகிறது.

இப்படி, அரசு படைப்பாக்கத் துறையாலும், ஊழியத் துறையாலும் கொள்ளையும் ஏமாற்றுமே செய்து வருகிறது. பல துறைகளில் முற்றுரிமை மேலீடு செய்வதால் அட்டூழியமே புரிந்துவருகிறது. அஞ்சல் கட்டணத்தை உயர்த்தி விட்டு, உறைச் செலவுக்கு 5 காசு என்று வாங்கி மக்களை ஏய்க்கிறது. உணவு விடுதியில் பொருள்விலை ஏற்றிக் காசு பிடுங்கும் முதலாளியைவிட, அடுத்த 50 காசுக்கும் ஓர் உருபாவுக்கும் தொடர்வண்டிக் கட்டணத்தைக் கூட்டியது. விரைவு வண்டியின் வேகத்தையோ ஏற்றத்தையோ கூட்டாமல், அதிவிரைவு வண்டி என்ற புதுப்பெயர் சூட்டிக் கூடுதல் கட்டணம் பிடுங்குகிறது.

தொடர்வண்டி நிலையத்திற்குள் வந்தால், அதற்கும் கட்டணம்! அதையும் கூட்டிக் கொடு என்கிறது. அரசுப்பேருந்து நிலையத்திற்குப் போனால், வண்டியில் இடம் வெறுமனாக இருந்தாலும் 'பதிவுச் சீட்டு' பெறவேண்டும் என்கிறது. குறைவான சுமைக்கும் எடைச்சீட்டுப் பெறவேண்டும் என்கிறது. இப்படிப் பல கொள்ளைகள்!

இத்தனையும் போதாவென்று, வரி போட்டுப் பிடுங்கிக்கொள்ளாத துறையோ பொருளோ இல்லை! ம.கோ. இராமச்சந்திரன் குலேபகாவலியில் பாடியது போல, இட்டளி வரி, துவையல்வரி, ஆண்பிள்ளைவரி, பெண்பிள்ளைவரி போடாததுதான் குறை. சிறுநீர் கழிக்கவும், மிதிவண்டி நிறுத்தவும் கூட - ஏலம் போட்டுப் பறித்துக் கொள்கிறது.

**அரசு தனிப்பெரும் குமுகாயப் பண்பாட்டுக் கேடுசெய் நிறுவனம் :**

அரசு சீட்டுக்குலுக்கல் நடத்தி நேரடிக் கொள்ளையில் ஈடுபடுவதுடன், மக்களைச் சூதாட்ட வெறியிலும் தள்ளுகிறது.

வரிவந்தால் போதுமென்று, பாலியல்வெறி, வன்முறைத் திரைப்படங்களை அனுமதித்துக் கொள்ளையடிப்பதுடன், மக்களைக் காமக்களி வெறியில் மூழ்கடிக்கிறது.

மஞ்சள் தாளிகைகளுக்கு விளம்பரம், சலுகைகள் தந்து மக்களிடையே நஞ்சை விதைக்கிறது.

குதிரைப் பந்தயம் நடத்த அனுமதித்து, வரிக் கொள்ளை அடிப்பதுடன், மக்களைச் சூதாட்ட வெறியில் ஆழ்த்தி வைக்கிறது.

கலை விழாக்கள் என்ற பெயரில், அருவருப்பு நடன, சூதாட்ட விழாக்களை நடத்திக் கொள்ளையடிப்பதுடன் குமுகாயப் பகைகளைக் காத்து வளர்க்கிறது.

விண்மீன் விடுதிகள் நடத்தி, மகிழ்துய்ப்புகளை முதலாளிகள் மேற்கொள்ளவும், அதிகாரிகள் கூட்டுச் சேரவும், இதற்கு மக்களை மறைமுகமாகக் கொள்ளையடிக்கவும் உதவுகிறது. அயலகக் கீழ்த்தரப் பண்புகளைப் பரப்புகிறது.

ஆக, அருவருப்பு, சாராயம், பரிசுச்சீட்டு, சூதாட்டம், என்று மக்களும், நாடும் எக்கேடு கெட்டுச் சீரழிந்தாலும், வருமானமே ஆதாயமாகக் கொண்டு சீரழிக்கிறது. அரசு, பரத்தமைத் தொழிலகம் நடத்தவும் தடங்காது என்ற நிலைக்குச் சென்றுள்ளது. முன்னமே விண்மீன் விடுதிகள், எழில் நிலையங்களில், பரத்தமையே முகாமைத் தொழில் என்றறிந்தும் உரிமம் வழங்கி வாழ்த்துகிறது.

தனிப்பெரும், குமுகாயப் பண்பாட்டுச் சீரழிவு நிறுவனமாக உள்ள இந்த அரசுதான் வேதம் ஓதுகிறது - "குடி குடியைக் கெடுக்கும்; குடிப்பழக்கம் வீட்டைக் கெடுக்கும்; புகைபிடிப்பது உடல் நலத்துக்கும் கேடு" என்று, இவையாவும் புனைவே!; தெரிந்து செய்யும் ஏமாற்று இல்லையா? (தொடரும்)

# போலியோ! பொதுவுடைமையோ!

"இளந்தமிழன்"

அண்மையில் சில காலமாகவே "எல்லாப் பொதுவுடைமையாளரும் பொதுவுடைமையாளர்கள் அல்லர். நாங்கள் தாம் உண்மையான மக்கள் நலனை எண்ணிச் செயலாக்கம் செய்யும் பொதுவுடைமையாளர்கள்" என்று சொல்லிக் கொண்டு மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் உலா வருகின்றனர். மக்கள் நலனை எண்ணி உண்மையாகவே ஆக்கமாகச் செயல்பட்டால் பாராட்ட வேண்டியது தான! அத்துடன் இணைந்தும் செயல்பட வேண்டியது தான்! ஆயின் அவர்களின் முரண்பட்ட கொள்கை இலக்குகளைப் பார்க்கின்ற போது இதுவும் ஒரு போலியோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

பொதுவாகவே இவர்கள் தற்போது தமிழகத்தில் வளர்ந்திருக்கின்ற இயக்கங்களை மிகவும் வெறுத்து ஒதுக்குவது போன்றே நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தையும் வெறுக்கின்றனர். உ.த.மு.க. இப்பொழுதுதான் தொடங்கப்பெற்ற மக்கள் இயக்கம், வளரவேண்டிய இயக்கம். முளைக்கும்போதே வெறுப்புமிழ்கின்றனர். நாமும் அவர்களை இப்போதே எடையிட விருப்பவில்லை. வளர்ந்து வந்து அதன் நடைமுறைச் செயல் திட்டங்களைப் பார்த்த பின்னர் தான் திறனாய்வு செய்வோம். அதுமட்டுமல்லாமல் இப்போது நிலவுகின்ற அரசியல் குழப்ப நிலைகளில் இது போன்று தோன்றிய மக்கள் இயக்கத் தோற்றத்தை நாம் காப்பாற்றவே செய்வோம். நமக்கு எந்த இயக்கத்தின் மீதும் ஒரு சிலதுளியும் வெறுப்புக் கிடையாது.

முதற்கண் இவர்கள் தமிழின உணர்ச்சி என்பதனையே வெறுக்கிறார்கள். பாட்டாளி முதலாளி என்ற வருக்கப் பிரிவு தான உண்மையான பிரிவு என்கிறார்கள். தமிழன் முழுவதும் சூத்திரனாகத்தானே இருக்கிறான் எனபதை உணர்வதில்லை. மேலும் நம் இந்திய நாட்டு வேறுபிற மாநிலப்பாட்டாளி மக்களையெல்லாம் ஒன்றிணைக்காது வேறுபடுத்துவதில் முனைகின்றோமாம். அதனால் அவர்கள் இந்தித் திணிப்பையும், சமற்கிருத, வடமொழி, ஆங்கிலக் கலப்பையும் ஏற்றுக் கொள்ளவே செய்வார்களாம். "மொழியைப் போற்றுகின்றோம், ஆனால் அதற்கு முதன்மை கொடுக்க விருப்பவில்லை." என்கின்றார்கள். பின்னர் மக்களுக்குப் புரிந்தால் போதும், மொழி ஒரு கருவிதானே எனக் கருதுகிறார்கள். இவர்களை நான் கேட்கிறேன், இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள அ.தி.மு.க. உறுப்பினர் தனபால் என்பவர் 1981-இல் இலங்கைச் சுற்றுச் செலவு செய்தபோது சிங்களக் காடையரால் கொல்லப்பட்ட போது தமிழகம் தவிர இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள் ஒன்றாகிலும் ஓர் இந்தியப் பாட்டாளி இலங்கை சென்று கொலையுண்ணப்பட்டானே என்று வருத்தப்பட்டதா? தமிழன் என்று நினைக்காவிடினும் இந்தியன் என்று வருத்தப்பட்டதா? தமிழகம் தானே துயர்பட்டது. தமிழகத்தின் திரவிடக் கட்சிகள் தாமே துயர்ப்பட்டன. அப்பொழுது இப்பாட்டாளிகள் எங்கே போனார்கள்?

இந்நாட்டில் பொதுவுடைமையை மலரவிட்டுப் பின்னர் தான் இந்நாட்டிலுள்ள சாதி மத இழிவுகளைப் போக்க முடியுமாம்! இது என்ன முரண்பாடு? பின்னர் எதற்கு மக்கள் கலை இலக்கியச் சொற்பொழிவு நடத்துகிறார்கள்? இலங்கை நாட்டில் தற்போது தமிழின மக்கள் முழுவதுமே அல்லவா தமிழ ஈழநாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்! தமிழின மக்களுக்குள்ளாகவே பாட்டாளி முதலாளி என்று பிரிபடவில்லையே? பிரிந்திருந்தால் சிங்களவனுக்குச் சிண்டு கிடைத்தது என்று பூண்டோடு இவ்வினத்தை அழித்திருப்பானே! உருசியாவில் ஒன்றாக நடந்தது என்றால் அங்கு இருந்த நிலையும் இங்கு இருக்கின்ற நிலையும் ஒன்றா? கடந்த 3000 ஆண்டுகளாகவே இந்நாட்டுப் பாட்டாளி மக்கள் கல்வியறிவு பெற வாய்ப்பில்லாது தானே! இந்த இடைக்கல்லான தடையை நீக்க முடியாமல் வெறும் பொருளியலுக்கான போர்க்குணத்தை எவ்வாறு பெற முடியுமென்று இவர்கள் கருதுகிறார்கள்? தமிழ் ஈழப் பாட்டாளி மக்கள் பிரிந்திருப்பது தம் போராட்டத்திற்கு வலுக்குறைவு என்று எண்ணித்தானே இருவரும் இணைந்து போராடுகிறார்கள்!

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

# தனித்தமிழ் நாட்டை அடைவோம்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 47 (28-10-84) பகுதி-43-45


# தமிழக முதல்வரின் உடல் நலக் குறைவு!

தமிழக முதல்வர் மாண்புமிகு ம.கோ. இராமச்சந்திரன், கடந்த ஒரு மாதமாக, உடல் நலக்குறைவால் சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவ மனையில் தங்கி மருத்துவம் பார்த்து வருகிறார். இச் செய்தியால் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்கள் அனைவரும் பல்வேறு மனத்துயருக்குத், வாழ்க்கை நெருக்கடிக்கும் ஆளாகி உள்ளதை அன்றாடம் செய்தித்தாள்கள் நமக்கு உரைக்கின்றன. நிலைமை இன்னும் சீராகவில்லை என்று தெரிகிறது. ஆனால், அதை யொட்டிப் பரவலான புரளிகள் மக்கள் மனநிலைகளை அலைக்கழித்து வருவது, நடைமுறை வாழ்க்கையையே பெரிதும் தாக்குதலுக்கு உள்ளாக்கி வருகிறது. நாம் அறிந்தவரையில், தனிப்பட்ட ஒருவர், அவர் எவ்வளவு பெரிய மக்கள் சாய்காலைப் பெற்றிருந்தாலும், இத்தனையளவு மக்களின் மனத்தாக்குதலுக்கும், வாழ்க்கை இயல்பு நிலைகளின் சிதைவுகளுக்கும் காரணமாக இருந்திருப்பார் என்று கருத முடியவில்லை.

ஒரு நாட்டின் முதலமைச்சர் என்னும் நிலைதவிர, பொது மக்களை ஏதோ ஒருவகையில் அல்லது பலவகையிலும் கவர்ந்த ஒருவராக திரு. இராமச்சந்திரன் இருப்பது,தமிழக வரலாற்றிலேயே வியக்கத்தக்க ஒரு செய்தியாகும். தெரிந்தோ தெரியாமலோ மக்கள் அவரிடம் ஆழ்ந்த அன்பு, பத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கு அவரின் அரசியல் நடவடிக்கைகளோ காரணம் என்று கூறிவிட முடியாது. அரசியலுக்கு வருமுன் அவர் ஈடுபட்டிருந்த கலைத் துறை நடவடிக்கைகளே, பெரும் பகுதி மக்கள் அவர் மேல் இத் துணை அன்பு கொள்ளக் காரணமாக இருந்தன என்றால், அது மிகையாகாது.

எஃது எப்படியாயினும், அவரின் தொடர்ந்த உடல்நலக் குறைவால், தமிழகத்தின் அரசியல் செயற்பாடுகளே, ஓரளவு நிலை குத்திப் போயிருக்கின்றன. அவரின் தற்காலிக அரசியல் ஈடுபாட்டுக் குறைவு, தமிழ்நாட்டின் எதிர்கால அரசியல் போக்கையே திசைதிரும்பச் செய்துவிடுமோ என்கிற ஓர் அச்சம் மக்கள் மனத்திலே தோன்றியிருக்கிறது.

நம்மைப் பொறுத்தவரையில், தமிழினத்துக்கு வேண்டிய முழு இறைமை சான்ற ஓர் ஆட்சியை பல்வேறு கோணங்களில் அவரால் தர முடியவில்லை என்றாலும், இந்திய தேசியம் என்றும் ஒருமைப்பாடு என்றும், கூறிக்கொண்டு, மக்களின் நலப் பகையான, வடநாட்டு ஆரிய அடிப்படை அரசியல் கோட்பாட்டின் வல்லாளுமைத் தாக்கங்கள் பெரும் அளவில், தமிழக மக்களைத் தாக்கி அடிமை கொள்ளாத வகையில், அவர் ஒரு தடுப்புச் சுவராக இருந்திருக்கிறார் என்றே கருதவேண்டியுள்ளது. எனவே, இப்பொழுதுள்ள நிலை, ஒருவேளை, நிலைப்பாடாக இருந்துவிட, வாய்ப்பேற்படுமானால், இந்திரா பேராயத்தின் அனைத்ததிகார வல்லாளுமையின் கொடிய ஆட்சி வெள்ளப், இற்றைச் சூழ்நிலையில், எங்கே தமிழகத்தில் தங்கு தடையில்லாமல் புகுந்துவிடுமோ என்று அச்சப்படவே வேண்டியுள்ளது. ஏனெனில், திரு ம.கோ.இரா.விற்குப் பகரமாக அரசுக் கட்டில் ஏறவேண்டிய திரு. கலைஞர் அவர்களின் உண்மை வெளிப்பாட்டை இந்திராகாந்தி இனங்கண்டு கொண்டு விட்டார், என்றே சொல்ல வேண்டும். எனவே,முன்பிருந்த சலுகை அல்லது அரசியல் கரிசனத்தை, கலைஞர் வகையில் அவர் காட்ட மாட்டார் என்றே உறுதியாக நம்பலாம். ஏனெனில், இன்றைய நிலையில், தமிழினத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் முழு நன்மை கருதும் அக்கறையுடைய ஒருவரை இந்திராகாந்தி விரும்புவது இல்லாமையே! அவரின் அத்தகைய இரண்டகத்தன்மையை முற்றும் முழு ஆற்றலுடன் எதிர்த்துப் போராடக் கூடிய ஒருவராக இருந்தாலன்றி, அவரின் கரவான அரசியல் சூழ்ச்சியை எவராலும் எதிர்கொள்ள முடியாது. இந்தநிலையில் கலைஞர் இந்திராகாந்தியின் துணையை மீண்டும் நாடிப் பெறுதலும் முடியாதது. அதைப் பெறாத ஒருவர்,தமிழகத்தின்

(3-ஆம் கலம் பார்க்க)

# அலுவல் மொழியாக இந்தியை வைப்பது சரியா? முறையா? ஆட்சியாளர் எண்ணிப் பார்க்கட்டும்!

— இராச. கார்த்திகேயன் —

1. இக்கால் அடிக்கடி நம் குடியரசுத்தலைவர் உட்பட, தலைமையமைச்சர் பிற அமைச்சர்கள் அனைவரும், "இந்தி எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் நாட்டு மக்களில் பெரும்பான்மையோரால் பேசப் படுவதாகவும் இருப்பதால், நடுவணரசின் அலுவல் மொழியாகத் தெரிவு செய்யப்பட்டது" என்றும், "இம்மொழி . . . . . அரசியற் சட்டத்தை உருவாக்கியோரால் தேர்வு செய்யப்பட்டது" என்றும் கூறி இந்திமொழியை அனைத்து நிலைகளிலும் மக்கள் மேல் வலிந்து, திணிக்க முற்பட்டு வருகிறார்கள். எனவே, இது தொடர்பான மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட உண்மைகள் சிலவற்றை வெளிக்கொணருமுகத்தான் இக்கட்டுரை தீட்டப்பெறுகிறது.

2. இந்தியா உரிமை பெற்றதும், மொழிச் சிக்கல் தலைதூக்கியது. இந்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் அமையவேண்டும் என ஒரு பிரிவினரும்,இந்தி அமைய வேண்டும் என மற்றொரு பிரிவினரும் வழக்காடினர். அதுபற்றி,பேராயக்கட்சியின் ஆட்சிக் குழுவில்(Congress Parlimentary Party) - இருவகையான கருத்துகள் நிலவியதால் அக் கட்சியால் முடிவெடுக்க இயலவில்லை. எனவே, இச்சிக்கல் அரசியல் அமைப்பாய்வு அவையின் (Constituent Assembly) தீர்ப்புக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அந்த அவையிலும் கடுமையான கருத்து வேறுபாடு இருந்தது. எனவே, அவ்வவையில் ஒப்போலைத் தேர்வு நடத்தப் பட்டது. அதிலே, இந்தியை ஆதரித்தும் எதிர்த்தும் ஒரே எண்ணிக்கையிலான ஒப்புறுதிகள் (Votes) விழுந்தன. எனவே, அவையின தலைவர் (President) பர். இராசேந்திர பிரசாத், தமது 'தீர்வு ஒப்புறுதியை' (casting - vote) இந்திக்கு ஆதரவாக அளித்து, ஒரெண்ணிக்கைப் பெரும்பான்மையில் இந்தி இந்தியாவின் அலுவல்மொழியாக அரசோச்ச வழி செய்தார்.

3. பொதுவாக, ஓர் அவைக்கட்டத்தில் இரண்டு பிரிவினருக்கிடையே கருத்தொற்றுமையில்லாதபோது தேர்ந்தெடுப்பிலும் இணையான அளவு ஒப்போலைகள் விழுந்தால், அவைத் தலைவர் தமது 'தீர்வு ஒப்புறுதியைப் பயன்படுத்தக்கூடிய அதிகாரத்தைச் செயல்படுத்த வேண்டிவரும். அப்போது, அவை, என்ன நடவடிக்கை செயல் முறையில் இருந்து வந்ததோ (Status quo) அதனையே தொடரச் செய்யுமாறு ஒப்புறுதியளிக்க வேண்டியதுதான் நடைமுறையிலிருந்து வரும் மரபு (convention) ஆகும். ஆனால், இங்கே அவ் வழக்கம் மீறப்பட்டது. (The Constituent Assembly could not arrive at a consensus in the matter. The question was put to vote and Hindi won on a single vote - the castiug vote of the President ' . . ." Ordinarily, when there is a tie between two groups in a meeting and the president is called upon to exercise his casting vote, he votes for the status quo. Here, it was the other way round" - Manorama Year Book 1981, Page 342,Part -III - Section - 93).

4 எனவே, அனைத்து இந்தியாவிலும் இந்தி அலுவல் மொழியாக வழிவகுத்த இந்த தீர்வு ஒப்புறுதி, ஒரு 'மரபு மீறிய தீர்வு உறுதியா (convention - contravened - casting - vote), இல்லையா, என்று எண்ணிப்பாருங்கள். அவ்வாறு எண்ணும் போது, பர். இராசேந்திர பிரசாத் மற்று மொழி பேசும் மக்களின் உணர்வலைகளைப் பற்றி அறியாதவா இல்லை என்பதையும், அவரது தாய்மொழி இந்தி என்பதையும் கருததிற் கொள்ளுங்கள்.

5. "ஒரு விளையாட்டு நன்றாக அமையவேண்டுமெனில், அதில் பங்கு கொள்வோர் அனைவரும் அவ் விளையாட்டின் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும். அதுபோலவே, மக்களாட்சி சிறந்து விளங்க அனைத்துக் கட்சியினரும் முறையோடு செயல்படவேண்டும்". மக்களாட்சி முறை என்பது, 'திட்டவட்டமான சட்டங்கள், (hard and fast rules மட்டுமல்லாது, சில வழிவழி வந்த 'மரபுகளும்' (conventions) பின்பற்றப்பட வேண்டிய ஆட்சி முறையாகும். தற்போதும் கூட இங்கிலாந்தில் எழுதப்பட்ட அரசியல் சட்டம்' ஏதும் இன்றி, 'மரபு'களை மட்டுமே துணையாகக் கொண்டு (வரம்புடைய முடியாட்சி என்ற பெயர் இருப்பினும் கூட) மக்களாட்சி முறை வழக்கில் இருப்பது, இங்கே நினைவு கூறத்தக்கது. எனவே,அதே இங்கிலாந்து நாட்டின் "பாராளுமன்ற அரசாட்சிமுறை" யைக் கருத்திற்கொண்டு இயற்றப்பட்ட நம் நாட்டு அரசியற்சட்டத்திலும், 'மரபு'கள் முகாமைத்தன்மை பெறுகின்றன.

6. நமது அரசியற் சட்டத்தை இயற்றும் போது சில இடங்களில் திட்டவட்டமான நெறிமுறைகளை வகுக்க இயலவில்லை. (எடுத்துக்காட்டு - நெருக்கடி நிலைமையைக் கொணர வேண்டுமெனில் காட்டப் படவேண்டிய கரணியங்கள் பற்றிய பகுதி), அந்நிலை நேரிட்டபோது, அரசியல் நிலைப்படுத்த அவையின் உறுப்பினர்கள், தங்களுக்குப் பின்னாளில் இந்நாட்டை ஆள்வோர் " அரசியலமைப்புச் சட்டத்தின் எழுத்தை மட்டுமின்றி அதன் உணர்வையும் மதித்தே செயல்படுவர்என்றும்'மரபுக'ளுக்கு உரிய மதிப்புத் தந்து, அவற்றை மீறாது செயல்படுவர்" என்றும் தங்களுக்குத் தாங்களே கூறிக் கொண்டனர். இவ்வாறான 'மரபுகளின் முகாமைத்தன்மை தீர்வு ஒப்புறுதி அளிக்கும்போது உணரப் படும். ஏனெனில், முடிவு என்னென்று அறியாத நிலையில் உறுப்பினர்கள் அளிக்கும் முதல் ஒப்போலைகளுக்கும், முடிவு என்னாகும் என்று அறிந்த நிலையில் அவைத்தலைவர் அளிக்கும் தீர்வு ஒப்புறுதிக்கும் நடைமுறையில் பெரும் வேறுபாடு உண்டு. அதனால்தான், அவைத் தலைவர் மீது கொணரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது, அவைத் தலைவர் தமது முதல் ஒப்புறுதியைப் பயன் படுத்தலாமே தவிர, தீர்வு ஒப்புறுதியைப் பயன்படுத்த முடிவதில்லை. தீர்வுஒப்புறுதி பற்றிய விளத்தங்களைத் நினைவு கூற வேண்டியுள்ளது தேவையாகிறது.

7. சட்டப்படி பார்த்தால், இணையளவில் ஒப்போலைகள விழுந்து, அவைத்தலைவர் (Presiding Officer) தமது தீர்வு ஒப்போலையை அளிக்க வேண்டிய நிலவரும் போது, அவர் மற்ற எந்த உறுப்பினரையும் போலவே தமது ஒப்புறுதியைப் பயன் படுத்தலாம். அதுபற்றிய கரணியம் ஏதும் கூறத் தேவையில்லை. ஆனால், சட்ட மன்றங்களின் நடைமுறைபற்றி,சட்ட மன்றத் தலைவர்களுக்குத் தலையாய வழி

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

(முதல் பகுதி தொடர்ச்சி)

ஆளுமையை இற்றை நிலையில் கைப்பற்றுவதும் மிகமிகக் கடினம். எனவே, ம.கோ. இரா. போலும் திராவிடத் தன்மையும், அதே பொழுதில் தேசியத் தன்மையையும் இரண்டறக் கலந்து செயலாற்றும் ஒருவரால்தான், தமிழக ஆளுமையைக் கைப்பற்றவும், தமிழினத்திற்கு வரும் நேரடித் தாக்குதலைச் சிறிது காலத்திற்குத் தடுத்து நிறுத்தவும் இயலும். அதற்குள் தமிழினம் தன்னை நிலைப்படுத்தியும், வலுப்படுத்தியும் கொள்ளலாம்; கொள்ளுதலும் வேண்டும்.

ஆகவே, ம.கோ. இரா.வின் அரசியல் மறைவு இற்றை நிலையில், தமிழகத்தில் ஓர் அரசியல் குழப்பத்தையே விளைவிக்கும். அது, தமிழினத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் நன்மையாக இருக்கவியலாது என்றே நாம் கருதுகிறோம். எனவே, தமிழக முதல்வர் திரு. ம.கோ. இராமச்சந்திரன் முழு உடல்நலம் பெற்று, மீண்டும் ஆட்சிக் கட்டிலில் வந்து அமர்ந்து இன்னும் சிறிது காலம், தமிழினத் தாக்கத்தின் தடுப்பு ஆற்றலாக இருந்து, ஆட்சி செய்ய வேண்டும் என்று நாம் முழுமனத்துடன் விரும்புகின்றோம். இயற்கை துணை நிற்குமாக! 0

# தமிழ்த்தேசியப் பொதுவுடைமை சமைப்போம்!

# "எல்லைகள் சுருங்கினால் இனமே இராது"

தமிழரின் நிலப்பரப்பு இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு எவ்வளவு விரிந்திருந்தது. தலைச்சழகக் காலத்தில் தமிழகம்தான் உலகில் பெரும்பான்மை இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது. ஒருவேளை அது தனி அரசாக அரசோச்சியதோ? தமிழக எல்லைகளைப் பற்றிப் பல்வேறு இலக்கியங்கள் பரவலாகப் பேசுகின்றன. அவ்வாறிருந்த நிலப்பரப்பு இன்று எங்கே போனது?

இயற்கையின் சீற்றங்களாலும் நம்மினத்திற்குள்ளே ஏற்படுகின்ற உடன்பிறப்புப் பங்கீட்டுப் பூசல்களாலும் நம் எல்லைகள் மிகவும் சுருங்கி விட்டன. அடுத்தடுத்து நிகழ்ந்த கடல் கோள்கள் இங்குதாம் நிகழ்ந்தன. வெள்ளத்தால் மேடு பள்ளமானதும், பள்ளம் மேடானதும், நிலம் நீராவதும், நீர் நிலமாவதும் இயல்பே. இருந்தாலும் தமிழகத்தில் நிலம்தான் நீரானதே யொழிய, நீர் நிலமானது பெரும்பாலும் நிகழவில்லை. எனவே கடலால் விழுங்கப்பட்ட நம் நிலப்பரப்பு மிக மிக அதிகம்.

நமக்குள் ஏற்பட்டு வரும் பூசல்கள் ஓர் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தி வருகின்றன. அன்றிலிருந்து இன்று வரை நாம் அடுத்தவரை வந்தேறிகளைத் தாம் போற்றிப் புகழ்கின்றோமே அல்லாமல், நம்மவரைப் புகழ்வதில்லை. மாறாக இகல் கொண்டு அவரின் எழுச்சியை உடனே வீழ்த்தி விடுகின்றோம், அவர் அழிந்தால் அடுத்து நாம அழிவோமே அழிக்கப்படுவோமே என்று எண்ணாமல்!

தமிழக எல்லைகள் சுருங்கிவருவது எதனைக் காட்டுகின்றது. நம் இனம் படிப்படியாக ஒடுக்கப்பட்டு, இறுதியில் தமிழினம் என்ற ஒன்று என்றோ இருந்து ஆண்டு அரசோச்சி அடிமையாகி அழிந்ததாக வரலாற்றுப் பொத்தகத்தில் படிப்பதோடு மட்டும் இருந்துவிடும். அதுவும் சில காலம் சென்ற பின் இராது. ஆக இந்தத் தமிழினம் இவ்வுலகில் இருந்ததாகவே இருக்காது.

ஒவ்வோர் இனமும் தனக்கென்று சில தனியான வாழ்வியல் பண்பாடுகளைப் பெற்றுத் தாங்கள் எங்கிருப்பினும், எந்த நாட்டில் எந்த இனத்தாரோடு கலந்து உறைந்தாலும், அவர்களின் பண்பாட்டினை அழியாமல் காத்து வருகின்றன. ஆனால் நாம் இன்று நம் பண்பாட்டினை மெல்ல மெல்ல அழித்து வருகின்றோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்ற கொள்கைக் கேற்பப் பொருள் கொள்ளாது, அதைப் பிறழ உணர்ந்து கழிக்க வேண்டுவனவற்றைக் கழிக்காதும் அழிக்க வேண்டுவனவற்றை அழிக்காதும் கொள்ள வேண்டியவற்றைக் கொள்ளாதும், தள்ள வேண்டியவற்றைத் தள்ளாதும் இருக்கின்றோம். ஏதோ நமக்கென்று ஒரு தனிப் பண்பாடு இருப்பதாக இன்றும் பீற்றித் திரிகின்றோம். அஃது இன்று ஒரு 75 விழுக்காடாவது தேறுமா என்றால் அது தான் இல்லை. ஒரு கால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் நம் எல்லைகள் சுருக்கப்பட்டு, நாம் அடிமையாக்கப்பட்டு, நம்மினம் கலப்பாக்கப்பட்டு, நம் பண்பாடும் கலப்புடையதாகி அழிந்துவிடும் என்றுதான் எண்ண வேண்டியுள்ளது.

சில பழக்க வழக்கங்களை அது நமக்கு உடலுக்கோ அன்றி உணர்வுக்கோ ஒத்துக் கொள்ளவில்லை எனினும் அதனை வலுவாக ஏற்கின்றோம். குழந்தைகளை ஏற்க வைக்கின்றோம். பிஞ்சிலேயே நஞ்சைக் கலந்தது போலும் தாய்ப்பாலியேயே உயிரைக் குடித்து உடனே கொல்லாது படிப்படியாய்க் கொல்லும் நஞ்சுபோலும் கலக்கின்றோம். அது பல வடிவங்களில் ஆங்கில வழி நாற்றங்கால் பள்ளி, தேநீர் குளம்பிக் குடிப்பு வெயில் காலங்களில் கூட வேனிற் பொழுதுகளில் கூட முழுக் காற்பைகள் அணிதல், பொதுவிருந்துகளில் இல்லக் கிழத்தியரோடு கலந்து இழிவாய் நடத்தல் ....... இது போன்ற நிலைகள் நம் பண்பாட்டின் வீழ்ச்சியைத்தான் காட்டுகின்றன.

ஓரிரு நிலைகள் மட்டும் அன்றில் இருந்து இன்று வரை மாற வில்லை. அவை தாம் ஒற்றுமையின்மையும் காட்டிக் கொடுத்தலும். அவற்றைத் தூக்கி யெறிந்து விட்டால் என்றோ நமக்கென்று ஓர் அரசு அமைந்திருக்குமே! இப்போதுள்ள இந்திய அரசு நம் எல்லைகளைச் சுருக்குவதிலும் நம்மைப் பிரித்தாள்வதிலும் திட்டமிட்டுச் செயல்படுகிறது. இது நம்மை முற்றிலுமாக அழிக்கும் முயற்சியே என்பதை இங்குள்ள அரசியற் கேடர்களும் காட்டிக் கொடுக்கும் கயவாளிகளும் உணர்ந்தும் தம் வளர்ச்சிக்கு மக்களை உரமிடுகின்றனர். எனவே இனியாவது நாம் எல்லைகளைப் பெருக்கா விட்டாலும் அது பிடிக்கப்படுவதைத் தடுத்தும் அவ்வெல்லைகளைப் பரந்த வாழ்விடங்களாக ஆக்கியும் வந்து தமிழினம் தழைக்க முயலுவோமாக. — மெய். அருள்மொழியன்

தலைவர் உ.த.மு.க. முகவை, வட்டம்.

— 0 —

உ.த.மு.க. உறவுமடல்

# தமிழ் - தமிழர்

தோழர்களே,

'தமிழ் வாழ்க' என்ற முழக்கம், 'தமிழர் சாக'- என்ற கருத்தக்கு உரமாக இருப்பதாகப் பொருள் கொள்கின்றனர். 'தமிழ்' மொழியின் பயனைத் தமிழர்க்குள் உள்ள சுரண்டல்காரர்களும் பயன் படுத்துகின்றார்கள். தமிழ்மொழியின் பெயரால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள், தமிழ்பேசும் தொழிலாளர் உழவர் போராட்டங்களை நசுக்குகின்றார்கள்; துமுக்கிகள் கொண்டு சுட்டுத் தள்ளியுள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

மொழியின் படையும், சீர்மையையும் எண்ணிப் பார்ப்பது, தமிழர் வாழ்வின் நலனைக் கருதியே. 'தமிழர்' என்று கூறும் கருத்து மாந்த நேயத்திற்கு மறுப்பானதன்று; உலக ஒற்றமைக்கு ஊறானதன்று!

தமிழ், தமிழினம், ஒடுக்கப்படும் போது எழும் தேசிய இனச் சிக்கலைத் தீர்க்க உலகியல் சார்ந்த தீர்வினை எதிர்பார்க்கின்றோம். இதற்கான வழி முறைகளில் நிற்பதுதான் 'தமிழ்வாழ்க' என்னும் முழக்கம்!

பொதுமையின் பேரால், சமவுடைமைப் பேச்சால் 'அரசியலை வாணிகம்' ஆக்கிக் கொண்டிருப்பவர்களை எதிர்ப்பது போலத் தமிழ், தமிழினப் பேரால் போலிமையான வழிகளில் சுரண்டுபவரை, ஆளுபவரை எதிர்ப்பதில் 'தமிழ்நிலம்' சரியான கருத்துக் கொண்டிருக்கிறது.

ஒட்டுமொத்தமாகச் சகட்டு மேனிக்குத் 'தமிழ் வாழ்க' என்று முழங்கும் தமிழ்மகளின் உணர்ச்சியை மறுப்பது, மக்கள் சார்ந்த போராட்ட இயக்கத்தின் கொள்கையாக இருத்தல் இயலாது!

போலிகளை எதிர்க்கும் உண்மையான உழைப்பியக்கமாக வளர விரும்புகின்றோம். இதற்கான சரியான திசைகாட்டுவதுதான் 'பொதுமையறிவு பெற்றவர் கூறுகும்! மாறாகப் 'பகடி' செய்ய முயல்வது தகாதது!

— பறம்பை அறிவன்

# இயக்க இசைக் கலைஞர்கள் பார்வைக்கு..!

— இரும்பிடத்தலையார்.

நெல்லை மாவட்டம் ஏரலில் கொற்கைத் தமிழ் மன்றத்தின் சார்பில் கழக முதல்வர் பாவலரேறு அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் இங்கே குறிப்பிடும் ஒரு கருத்து தோன்றியது.

நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்னால் ஒலி பெருக்கி வைத்துக் கூட்டத்தினரை அழைப்பது ஒரு முறையாகி விட்டது. நமது இயக்க விழாவிலும் அவ்வாறு ஒலிபெருக்கி வைக்கும்போது வேண்டாத திரைப்படப் பாடல்களையே இசைக்க வேண்டி இருக்கிறது.

நமது இயக்கப்பாடல்கள் இன்னும் இசைத் தட்டுகளில் ஏறவில்லை. ஆனால் ஒலிப்பதிவு நாடாக்கள் இப்போது புழக்கத்திற்கு வந்துவிட்டன.

எனவே சென்னை போன்ற இடங்களில் இருக்கின்ற நமது இயக்கத் தோழர்கள் இசைக் கருவிகளின் உதவியுடன் இயக்கப் பாடல்களை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிந்து கொள்ளலாம் பெருமளவு பதிந்து கொண்டால் - ஒலிபெருக்கி அமைப்பு வைத்திருப்பவர்கள் எல்லாம் வாங்கிக் கொண்டால் இயக்கக் கூட்டங்களில் அப்பாடல்களையே இசைக்கலாம்.

முதலில் உடனடித் தேவையாக ஒரு சில நாடாக்களில் பதிந்து முதல்வர் அவர்கள் கையில் கொடுத்து விடலாம். தலைவர் செல்கின்ற கூட்டங்களுக்கு எல்லாம் அவற்றைத் தம்முடன் எடுத்துச் சென்றால் ஆங்காங்கே அவற்றை இசைத்துப் பரப்பலாம்.

அன்பர்கள் இதனைச் செயல்படுத்துவது பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுகிறேன்.

# உ.த.மு.க. செயல்வீரர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு

உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில் விரைவில் நடைபெறவிருக்கும் மொழி இன நலப் போராட்டங்களில் கலந்து கொள்ள விரும்பும் கழக உரவோர்கள் தங்கள் பெயர், முகவரிகள் இவற்றைத், தங்களின் முழு ஒப்புதலுடன் விரைவில் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் சிறை செல்வதற்கு ஆன, தங்களது இசைவையும் ஒப்புதலையும் தெரிவிக்க வேண்டுகிறோம். சிறை செல்ல இயலாதவர்கள் அதுபற்றிய தங்கள் நிலைகளை முன் கூட்டியே தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

நிலக்கோட்டைப் பயிற்சி வகுப்பில் மொழி, இன, நாட்டுநலத் தொண்டுகளில் ஈடுபட இசைவு தெரிவித்தவர்களும் இந்த அறிவிப்பின்படி தங்கள் உறுதி மொழிகளை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

— கழக முதல்வர்.

# போர்க்குரல்

— வள்ளிதாசன் —

இன்னும் பொறுப்பது நேர்மையில்லை இங்கே
ஏனிந்தத் தாழ்த்தங்கள் தோழா - எரி
ஈட்டியைப் போலெழு தோழா - நம்
அன்னைத் தமிழினம் ஈழத்துத் தீயினில்
இன்னல் அடைந்தது போதும் - இனி
போர்க் கொடி தூக்கிட வேண்டும்!

சிங்களக் காடையர் ஈழத் தமிழரைச்
சிட்டுக் குருவிகள் போல - அட!
சுட்டுப் பொசுக்குதல் கண்டு - இந்த
'சிங்க'த் தமிழினம் கையைக் கட்டிக்கொண்டு
சிந்தை தயங்குதல் ஏனோ? - இன்னும்
சீரழிவென்பது தானோ?

வீட்டை எரித்தனர் நாட்டைச் சிதைத்தனர்
'வீதி'யில் பெண்களை வீசி - அவர்
வெற்றிக் கொழுப்புரை பேசி - வெறிப்
பாட்டை இசைத்தனர் கேட்டை வளர்த்தனர்
பார்த்தும் இனிஇங்குத் தம்பி - நாம்
படுத்துக் கிடப்பதோ வெம்பி!

சொல்ல முடிவதற் கில்லையடா என்றன்
உள்ளம் எரிகிற தையோ! - நம்
தென்னர் தமிழ்மறம் பொய்யோ - இங்கே
உள்ள தலைவர்கள் ஒற்றுமை யாய்நிலை
கொள்ளும் வரை துயர்ப் பாடு - இதன்
எல்லை எதுவரை கூறு?

இலங்கைப் பொருள்வளம் ஈழத் தமிழர்கள்
அரத்தம் சிந்தித்தந்த சொத்து - அவர்
மொத்த உழைப்பென்னும் மூத்து - இன்று
கலங்கிக் கதறிட பேயினச் சிங்களக்
காடைய ரால்சிதை வுற்றார் - வெறும்
கண்ணீர்ப் பரிசெனப் பெற்றார்!

குட்டிமணி செகன் என்னும் இளைஞரைத்
கொன்றபழி வரலாறு - அதைக்
கொஞ்சம்நீ சிந்தித்துப் பாரு - கையைக்
கட்டிக் கொண்டுஇன மானம் அவையின்றி
இந்தியன் என்றிருப் பாயோ? - அந்த
இந்திரா காந்தியும் தாயோ?

ஈழ விடுதலை வீரப் புலிகளின்
ஈட்டி உரைகளைக் கேளீர் - தமிழ்
நாட்டினர் ஒன்றெனச் சேரீர் - இனத்
தோழர்க்குத் தோள்கொடுத் தீழ விடுதலை
மானத்திறனுடன் காண்பீர் - வெறும்
மாந்தத் தனங்களைக் கொல்வீர்!

# சாதி நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை

தொடர் : 5 :

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகக்

## கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

— நிகழ்ச்சிச் சுருக்கம் —

கருத்தளவில் நிரம்பச் செய்திகளைப் பெற்றுச் செயலுக்காக அங்காந்து திரிந்து கொண்டிருந்த உரவோர்களுக்கு ஏழாம் நாள் வகுப்புத் தொடரின் இறுதியில் நிகழ்ந்த பாவலரேறுவின் உரைத் தொகுப்பு வெகுவாக உணர்வேற்றியது.

கழக முதல்வரின் கட்டளைக் கிணங்க எட்டாம் நாள் வகுப்பு 28-5-84-ஆம் பக்கல் காலை 6-மணிக்கே தொடங்க இருந்தது. காலை 4-மணிக்கே எழுந்து விடும் பழக்கம் கொண்டவராகையால் முதல்வர் ஐயா அவர்கள் வழக்கம் போல் எழுந்திருந்து ஆய்வாளர் மாளிகையின் முன்புறத்தில் இருந்த சோலையில் நாற்காலி போட்டு அமர்ந்து கொண்டு எழுந்துவந்த அன்பர்கள் சிலருடன் கருத்துரையாடிக் கொண்டிருந்தார்கள்.

மெல்லிய தென்றல் காற்று மலை முகடுகளைக் கடந்து வையை ஆற்றைத் தழுவிக் குளிர்மையொடு வீசிய பாங்கில், பாவலரேறுவின் குரல், போர்க் காலங்களில் படைவீரர்களுக்குத் தலைவரின் அரிய திறவுரைகள் இரவில் போர்க் கூடாரங்களுக்கிடையில் கேட்பது போன்றிருந்தது.

ஏறத்தாழ 6-மணிக்குள் உரவோர்கள் அனைவரும் படிப்படியாக எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்து அமர்வதற்கு முன்பாகவே கழகமுதல்வர் அவர்களுடன், துணைப் பொதுச் செயலர் திரு தென்னவன்கோ, கொள்கை பரப்புச் செயலர் திரு. தமிழ்மாறன் ஆகியோரும் வந்து அமர்ந்திருந்தனர். வகுப்பு சரியாக 6-மணிக்குத் தொடங்கப் பெற்றது.

முப் பகுப்புகளாகப் பிரிக்கப் பெற்றிருந்த உரவோர்கள், வரிசைக்கு மூவராக மூன்றுபகுதியினராக அமர்ந்தனர். மொழியியல் உரவோர், இனவியல் உரவோர், நாட்டியல் உரவோர் என முப்பகுப்பினரும் வரிசையாக அமர்ந்து பாவலரேறு அவர்களின் உரையைக் கேட்கலாயினர்.

உலகியல் நடைமுறைகளை உளவியல் பாங்கொடும், மெய்யியல் தொடர்போடும் கழகமுதல்வர் விளக்கப் படுத்தினார்கள். அறிவுஉணர்வு, மனஉணர்வு இவற்றின் புற, அக வளர்ச்சிகளையும் அவற்றின் ஈடுபாடுகள் பற்றியும் அவற்றின் வளர், சிதை நிலைகள் பற்றியும் தெளிவுற விளக்கினார்கள்.

புறநிலை அறிவு, வளர்ச்சிக்கேற்ப, அறிவூட்டத்திற்கேற்ப திருத்தப்படலாம். ஆனால் அகநிலை அவரவர்களே திருத்திக் கொள்ளப்பட வேண்டியது. பிறர் கூறும் அறவுரைகளினால் உள்ளம் வளர்ச்சியோ, மலர்ச்சியோ ஏற்படுவது அரிது எனும் நிலைகளை அமைவுறக் கூறிவிட்டுக் காலந்தவறாமை, கட்டளை தவறாமை, கடமை தவறாமை எனும் நிலைகளைக் கொண்டு, நாம் எவ்வகையில் பொதுத் தொண்டில், செயல்பட வேண்டும் எனக் கூறினார்கள். ஐயா அவர்களின் பேச்சுக்குப் பின்னர் உரவோர்களின் ஈடுபாட்டுப்பட்டியல் திரு. புகழேந்தி அவர்களால் படிக்கப் பெற்றது. அதன் பின்னர் பெயர்ப் பதிவுகள், எண் பதிவுகள் ஆகியவை நடந்தன. அதற்குப் பிறகு சிற்றுண்டி வழங்கப் பெற்றது.

காலைச் சிற்றுண்டிக்குப் பின்னர் 9 மணியளவில் காலை வகுப்பு தொடங்கப் பெற்றது. நிகழ்ச்சிக்குத் திருப்பூர் புலவர். இரா. வடிவேலன் க.மு. அவர்கள் தலைமையேற்றார். தாராபுரம் திரு சு. முத்து அனைவரையும் வரவேற்றமர்ந்த பின்னர், தென்மொழி ஓவியரும், நெடுநாளைய தென்மொழி அன்பருமாகிய திரு. ப. அறவாழி அவர்கள் 'தமிழர் கலைகள்' எனுந் தலைப்பில் அரியதொரு பொழிவை நடத்தினார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற கலைகள் அவற்றுள் பெரும்பாலானவை அழிந்து போன வரலாறு இவற்றை விளக்கிவிட்டு, உண்மைக் கலை என்பது எது, போலிமை எங்ஙனம் கலந்தது எனும் நிலைகள் தொடர்பாகத் தாம் விரித்து எழுதி வந்திருந்த கட்டுரையைப் படித்தார் திரு. அறவாழி; அவரின் அரிய பொழிவுகளுக்கிடையில் 'கலை'த் தொடர்பாகப் பல அரிய கருத்துகள் வெளிப்படுத்தப் பெற்றன.

அவரைத்தொடர்ந்து மாணவர்களும் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள வேண்டும் எனும் நிலையில் 'இன நலத் தொண்டில் மாணவர் பங்கு' எனுந் தலைப்பின் கீழ் திரு. க. பரமசிவம், திரு. தமிழ்ச்சேரன் ஆகிய இருமாணவர்கள் உரையாற்றினார்கள்.

மேல் நிலைவகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் இருவரும் தம்மால் இயன்ற நிலையில் பல குறிப்புகளைக் கொண்டு ஆழ்ந்து வெளிப்படுத்திய கருத்துகள் செவிமடுக்க இனிமையாக இருந்தன. இறுதியில் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த புலவர். திரு வடிவேலனார் அவர்கள் முடிவுரையைச் செறிவுறத் தொகுத்துக் கொடுத்தார். அவரின் முடிவுரையுடன் அன்றைய காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

உணவுக்கான இடைநேரத்தில் ஈரோட்டுப் பேரா(சை) ஆசிரியர் தம் வரலாற்றை வெளிப்படுத்தும் நூலுள் தம்மைப் பற்றிப் பல பொய்யான செய்திகளை வெளியிட்டுக் கொண்டதுடன், அதை எழுதியவர் என்று திரு வடிவேலனார் பெயரையும் பொய்யாகக் குறிப்பிட்டுக் கொண்டதையும் கண்டித்துக் கோவை அன்பர்கள் அதுபற்றி வடிவேலனாரைப் பல கேள்விகள் கேட்க, திரு. வடிவேலனார் அவர்கள், தம் பெயரை அந் நூலுக்குப் பயன்படுத்த இசைவு கேட்ட அவர், இதுபோலும் செய்திகளை வெளியிடுவார் எனத் தாம் எதிர்பார்க்கவில்லை என விடை கூறினார்.

பகல் இடைவெளிக்குப் பின்னர், பிற்பகல் வகுப்பு 3 மணியளவில் தொடங்கப் பெற்றது. நிகழ்ச்சிக்கு நெடுநாளைய தென்மொழி அன்பரும், 'பள்ளிப்பறவைகள்' - எனும் பாவலரேறுவின் நூல் வெளியீட்டாளரும் ஆகிய திரு. உளங்கவரழகன் தலைமையேற்றார். வகுப்பெடுக்க வந்திருந்தார் அனைவரையும், உரவோர்களையும் திருவாட்டி தேன்மொழியருளி அவர்கள் திறம்பட வரவேற்று அமர்ந்தபின, 'இன முன்னேற்ற முன்னறிவோன் திருவள்ளுவப் பேராசான்' என்னும் அரிய தலைப்பின கீழ் நெடுநாளைய தென்மொழி அன்பர் சி. அரசிறைவன் அரிய சொற்பெருக் காற்றினார். 'திருவள்ளுவா உயர்ந்த சான்றோராக மட்டும் அல்லாமல், அறிஞராக மட்டும் அல்லாமல், மாந்த உளவியல் துன்பங்களை வேரறுக்கும் பெரும் சிந்தனையாளராகவும் (A great Redeemer) இருக்கிறார்.'

'அக் காலத்தில் இனக் காப்பு நிலையில் வெளிப்படையாக ஏதும் சொல்லி, எழுதிவிட முடியாத சூழலில் மறைமுகமாக நம்மினக் காப்பிற்காகப் பல அரிய செய்திகளை உள்ளடக்கி அறிவுரைகள் பகன்றுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. 'சிற்றினம் சேராமை' என்று தலைப்பிலேயே சிற்'றினம்' எனப் பெயரை ஆரிய இனத்திற்குப் பொருள் விளங்காதவாறு எடுத்துரைத்துள்ளார் - இந்நிலைகள் எல்லாம் பாவலரேறு அவர்களால் விரித்துக் கூறப்பெறுவன'- எனப் பல வகையான கருத்துகளைக் கூறித் தம் உரையை மாலை ஐந்து மணி போல் முடித்துக் கொண்டார்.

மாலை வகுப்பு 6-மணியளவில் ஆய்வாளர் மாளிகையின் முன் முற்றத்தில் நடந்தது. சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளியார் அவர்கள் மாயம், மந்திரம் ஆகிய இரு சொற்களுக்கும் மூலம் காட்டி விரித்துரைக்கும் முகத்தான் சொற்பெருக்காற்றியது தமிழ் நெஞ்சத்தினரை வியக்க வைத்தது.

'மை' எனும் சொல்லின் வேரடியிலிருந்து 'மாயம்' சொல் வளர்ந்து வந்த நிலையினையும், அதன் வளர்ச்சி நிலைக்கிடையில் நூற்றுக்கணக்கான சொற்கள் பிறமொழிகளில் பரவி உருமாறிய நிலைகளையும் திறம்பட எடுதது்க் காட்டினார்கள்.

திரு. அருளியார் அவர்களின் அரிய சொல்லாய்வுரைக்குப் பின்னர் கழகமுதல்வர் அவர்கள் ஏறத்தாழ ஒரு மணி நேர அளவில் மொழிநிலையில் கடந்தகாலத தென்மொழியின் பணிகளை விளக்கியும் திரு அருளியார் அவர்களின் அரிய சொல்லாராய்ச்சித் திறனின் சிறப்பையும் அதன் இன்றியமையாமையும் உணர்த்தியும் உரையாற்றினார்கள். பல வரலாற்று நிகழ்வுகளை இடையிடையே குறிப்பிட்டுத் தென்மொழி அமைப்பின் இன்னல்களையும், அவற்றை அது எதிர்கொண்ட நிலையினையும் அக்கால் விளக்கப் படுத்தினார்கள். அன்றைய வகுப்பு இரவு 10-30 மணியளவில் மறுநாள் வகுப்பு காலை 7 மணியளவிற்குத் தொடங்கப்பெறும் எனும் அறிவிப்போடு முடிவுற்றது. (தொடரும்)

## அன்பை வளமூட்டும்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
உண்மை வழிகாட்டும் — தமிழ்ப்
பண்பை நிலைநாட்டும்! — நம
அன்பை வளமூட்டும்.

உலகத் தமிழினம் ஒன்றெனத் திரண்டிட
உற்ற வழிகூறும்! — மொழி
வற்று நலங் கோரும்! — நம்மைப்
பெற்ற பழிமாறும்!

மடமை அகன்றிட மாசு மறைந்திட
மதிதகு வழிச்சொல்லும்! — இனம்
மலர்ந்திடத் துணைவெல்லும்! — தமிழர்
மடிந்திடும் துயர் கொல்லும்.

கடமை உணர்வுடன் நாளும் செயல்பட
சட்டளை இட்டுவரும்! — புதுத்
திட்டங்கள் நிறை வேற்றும்! — இதைத்
திசைதொறும் பறை சாற்றும்!

மணப்பாறை - ந. இளவழகன்




"அண்ணா!"

"என்ன தம்பி?"

"இலங்கையில் அமெரிக்கக் கணவன் மனைவியரான இருவர் கடத்திச் செல்லப் பட்டிருந்ததைப் பற்றி செயவர்த்தனே என்ன கூறினார் தெரியுமா அண்ணா!"

"சொல் தம்பி!"

"அவ்வாறு கடத்திச் செல்லப்பட்டது விலங்குத் தன்மையானது என்றும், அத்தகைய அச்ச மூட்டும் செயல்களை ஒடுக்கத் தம்முடைய அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் கூறினாராமே!"

"அப்படித்தான் செய்தி வந்துள்ளது!"

"சில மாதங்களுக்கு முன் இலங்கை வாழ் (அப்பாவித்) தமிழர்கள் ஆயிரக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டதும், சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களின் கண்கள் தோண்டப்பட்டு அவர்கள் அடித்துக் கொல்லப் பட்டதும், நிர்மலா இணையர்கள் சிறை வைக்கப் பட்டிருந்ததும் இவற்றையெல்லாம் இலங்கை அரசு வாளா பார்த்துக் கொண்டிருந்ததும் மட்டும் செயவர்த்தனேயின் அகர முதலிப் படி மாந்தத் தன்மையின் செயல்களாக இருக்குமோ? அச்ச மூட்டாத செயல்களாக இருக்குமோ?"

"எனக்குத் தெரியாது தம்பி! — தமிழவேள்

### வாங்கிவிட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள்! விற்பனைக்கு அணியமாக உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | பாவேந்தர் பாரதிதாசன் — | 14.00 |
| 2. | இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு? — | 1.00 |
| 3. | வாழ்வியல் முப்பது (மறுமதிப்பு) — | 1.50 |
| 4. | சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும் — | 0.50 |
| 5. | ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் — | 2.25 |
| 6. | இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் — | 1.50 |

தொடர்புக்கு : மே/பா தென்மொழி, சென்னை.5.

# நாம்தாம் அதைப்பிடித்துக்கொண்டுள்ளோம்

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

காட்டியாகப் பயன்படும் பொத்தகத்தை எழுதிய வயவர் தாமசு எர்க்கின் மே என்பவர் என்ன கூறுகிறார்? "ஓர் அவைத் தலைவர் தமது நடுநிலைமையின் மீது யாரும் சிறிதுகூடக் குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும் - என்பதற்காக, முடிந்தபோது (அல்லது முடிந்தவரை) தமது முடிவே இறுதியான முடிவு என்ற நிலையை உண்டாக்காத வகையில் ஒப்போலையளித்த அதற்கான காரணியங்களை விளக்குவது வழக்கம்' என்கிறார். ("In order to avoid the least imputation upon his impartiality, it is usual for him when practicable to vote in such a manner as not to make his decision final and to explain his reasons' - 'May' - Parliamentary Procedure in India-Page 118-A R. Mukherjea)

இங்கே முகாமையானவை, தீர்வு ஒப்போலை அளிக்கும்போது, அவைத் தலைவர் தமது நடுநிலைமை பற்றி யாரும் குறைகூறக்கூடாது என்ற அக்கறை உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பது பற்றி 'மே' கூறும் கருத்துகள் ஆகும். 'முடிந்தபோது' (when practicable) என்ற சொல், ஓர் அவைத் தலைவர் தம்மால் முடியாதபோது விருப்பம்போல் ஒப்போலையளிக்கலாமென்பதற்காகப் பயன்படுத்தப் படவில்லை ஏனெனில், அவையில் ஒரு சட்டத்திருத்தம் பற்றி இன்று உரையாடலாமா கூடாதா என்பதில் கூட தீர்வு ஒப்போலை அளிக்க வேண்டி நேரும். அப்போது, அவைத் தலைவர் எவ்வாறு ஒப்போலை அளித்தாலும் இறுதித் தீர்ப்பாகவே அமையும். இந்த நிலைகளால்தாம், 'முடிந்தபோது' என்ற சொல் செருகப்பட்டுள்ளது. அதுபோல் நேரங்களில், மேல் வழக்காடலுக்கு வழிவகுத்தே அவைத்தலைவர்கள் ஒப்போலைகள் அளித்துள்ளனர்.

8. மேலும், ஒரு தீர்மானம் தொடர்பாக முட்டுக்கட்டை நிலைமை (tie) வரும்போதும்கூட, "மீண்டும் அத் தீர்மானத்தை மறு ஆய்வு செய்யும் வாய்ப்பை அளிக்கும் வகையில்தான், அந்த முடிவு உறுதி ஒப்போலையை அவர் (அவைத் தலைவர்) பயன்படுத்துவார்". (ஆங்கில நாட்டின் அரசியலமைப்பு - பக்கம் 80 - என். கே. இராசகோபால் - தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்). ஆனால், ஒரு சட்டத் திருத்தம் செல்லுமா செல்லாதா என்ற நிலை வரும்போது அவைத் தலைவர் ஒப்புறுதியளிக்க வேண்டிய முறை என்ன? இது பற்றி திரு. டெனிசன் என்ற அவைத் தலைவர் சிறந்த கருத்து தெரிவித்துள்ளார். அவரது கருத்தே பெரும்பாலோரால் பின்பற்றப்பட்டுள்ளது. 10.5.1860 இல் ஒரு சட்டத் திருத்தம் பற்றி ஒரே அளவில் ஆதரவாகவும் எதிராகவும் ஒப்போலைகள் விழுந்தபோது, திரு. தெனிசன், கூறியதாவது:- "முன் மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தத்தின தகுதி பற்றி இந்த மன்றம் ஒரு தீர்வுக்கு வரவியலா நிலையில், இந்தச் சட்ட முன்மொழிவை எந்த வடிவில் 'குழு' இந்த மன்றத்திற்கு அனுப்பியதோ, அதே வடிவில் அந்த முன்மொழிவை விட்டுவைப்பதன் மூலமே எனது பணியை நான் செவ்வனே செய்பவன் ஆவேன்". இவ்வாறுகூறி அதன்படியே தமது தீர்வு ஒப்போலையையும் அந்தச் சட்டத் திருத்தத்திற்கு எதிராக அளித்தார். அஃதாவது அச் சட்டத்திருத்தம் கொணரப்படுமுன் நாட்டில் என்ன நிலைமை நிலவியதோ (status quoarte) அது தொடர வழி செய்தார்.

"On 10 May 1860 the numbers being equal up on an amendment proposed to a Bill, on report, Mr Speaker Denison stated that as the House was unable to form a judgement upon the propriety of the proposed amendment, he should best perform his duty by leaving the Bill in the form in which the Committee had reported it to the House, and accordingly gave his vote against the amendment. A similar course has generally been taken on stages in the progress of Bills - often without stating any reasons. (Pages 118-119 parliamentary Procedure in India-A R. Mukherjea, Oxford University Press-1958).

9. இவற்றிலிருந்து என்ன தெரிகிறது? சுருங்கச் சொன்னால், தீர்வு ஒப்போலை அளிக்கும் அவைத் தலைவர் தமது நடுநிலைமை மீது யாரும் குறைகூறா வண்ணம் நடப்பதில் நாட்டம் உள்ளவராக இருக்க வேண்டும் என்றும், சட்டத்திருத்தங்களின் போது, இருக்கும் நிலைமை (status quo.) தொடர வாய்ப்பளிப்பதே சிறந்த வழிமுறை என்றும் தெரிகிறது. தீர்வு ஒப்போலைபற்றி வழிவழி வந்த 'மரபு'கள்தாம் உண்டே தவிர, 'திட்டவட்டமான சட்டங்கள்' அல்ல.

10. எனவே, இப் பின்னணியில், அரசியல் நிலைப்படுத்து அவையில் இந்திக்கு ஆதரவாக தீர்வு ஒப்போலை அளிக்கப்பட்ட வகை, அதன் முகாமைத் தன்மை, ஆகியவை பற்றி எண்ணிப்பார்க்க இந்நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு. ஆட்சியில் உள்ளவர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும். இக் கட்டுரையின் முதற்பத்தியில் தரப்பட்டுள்ள, இந்தி ஏன் அலுவல் மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது குறித்துத் அவர்கள் கூறிவரும், காரணியங்களை மீண்டும் ஒருமுறை திருப்பிப் பார்க்கட்டும். 0

## போலியோ! பொதுவுடைமையோ! ...

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் என்றால் பகடியாகப் பார்க்கிறார்கள். "அ'தென்ன, தமிழ்த் தேசிய இனம்" என்கிறார்கள். எல்லா மாநிலப் பாட்டாளி மக்களும் ஒன்று சேர்ந்து போராட முடியுமென்றால் தமிழகப் பாட்டாளி மக்கள் அசாம் மக்களுடன் இணைந்து போராட முடியுமா? பஞ்சாபு மக்களுடன் இணைந்து போராட முடியுமா? தொடக்கத்தில் கருத்துத்தான் தெரிவிக்க முடியும். அ'து எப்படி, இந்தியா முழுவதிலும் ஒரே பொழுதில் புரட்சி வெடித்துவிடும் என்று கருதுகிறார்களோ தெரியவில்லை!

மேலும், இவர்கள் மொழியைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை. மொழி ஒருவரின் கருத்தைப் புரிந்துகொள்ளும கருவிதானே என்று கூறிக்கொண்டு வடமொழியையும் ஆங்கிலமொழியையும் ஏராளமாகக் கலக்கின்றனர். 'பாசிசம்' என்றும் 'பூர்ஷ்வா' என்றும், 'பரிஷயப்' என்றும், 'யதார்த்தம்' என்றும் எந்தப் பாட்டாளி மக்களுக்குப் புரிவதாக எழுதுகின்றார்களோ, தெரியவில்லை! நாம் தனித்தமிழில் பேசியது,பேசிவருவது எந்தப் பாட்டாளி மக்களுக்குப் புரியாமல் அவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்தியது! இவர்கள் தமிழினத் தலைவர்களை ஒரு பொருட்டாகக் கருதுவதே இல்லை. மறைமலையடிகள், பாவாணர், பெரியார், அண்ணா இவர்கள் உண்மையான மக்களியக்கம் தொடங்கவில்லையாம். பெரியார் என்றாலே இவர்களுக்குக் கசப்பு. ஆர்.எசு எசு. காரனுக்கு வேண்டுமென்றால் பெரியார்மேல் வெறுப்பாயிருக்கலாம். அவன் இயல்பு அது. இவர்களுக்கென்ன வந்தது! ஒருமுறை பெரியாரைப் பற்றிப் பேச்சு வந்தபோது பெரியார் இல்லாவிட்டால் தமிழின வளர்ச்சி பெரிதும் வீழ்ச்சியடைந்திருக்கும் என்று நாம் குறிப்பிட்ட போது அவர்கள்" பெரியாரால்தான் இந்நாடு சீரழிந்தது" என்றும், "என் படையில் முட்டாள்கள் தம் தேவை என்பவர், எப்படித் தலைவனாக இருக்க முடியும்" என்றும், "கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி என்றால், கடவுளை வணங்கும் என் பெற்றோர் காட்டுமிராண்டிகளா?" என்றும் முரண்பட்ட வினாக்களைத் தொடுக்கும் அன்பருக்கு நாம் விடை சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை. அவர்களின் மேலிடம் இவ் வினத் தலைவர்களைச் சிந்திக்க வே மறுக்கிறது.

மற்றுமொருமுறை அவர்களது கொள்கை விளக்கக் கருத்தரங்கு ஒன்றில் "மக்களைப் பற்றிச் சிந்தித்துப் பாடிய மக்கள் பாவலர் யார்?" என்று கேட்டபோது, பாரதியாரும், பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் இருவருமே' என்றனர். "ஐயா, பாவேந்தர் பாரதிதாசன மக்கள் பாவலர் இல்லையா" என்று கேட்டதற்கு "அவர் ஓர் அழகுணர்ச்சிப் பாவலர்தாம்" என்றனர். நான் மீண்டும் கேட்டேன், "ஐயா, நீங்கள் மக்கள் கலை இலக்கியக் கழகம் என்று பெயர் வைத்திருக்கின்றீர்கள். உண்மையாகவே மக்களுக்காகப் பாடிய மக்கள்பாவலர் பாவேந்தரை எப்படி மறந்தீர்கள்? எப்படி மறக்க முடிந்தது?

"நித்திய தரித்திரராய் உழைத்துழைத்து
திணைத் துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிது கூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணுமின்பம்
கவின் நிலவே உனைக் காணும் இன்பந்தானோ"

"சித்திரச்சோலைகளே உன்னைத் திருத்த இப்பாரினிலே
-முன்னர்-எத்தனைத் தோழர் இரத்தம் சொரிந்தனரோ"

"பஞ்சமிலாக் கோயிலுக்கு பஞ்சாமிர்தமா
படையல் அஞ்சாறு தரமா - இங்கு
கொஞ்சுகின்ற தெய்வங்கட்கு கிண்டலா அப்பா
மனத்தின் மாசு தவிர் அப்பா"

ஆகிய பாடல்களைப் பாடியும், பாட்டாளி, பொதுவுடைமை, பெண்ணடிமை, மூடநம்பிக்கை ஒழிப்பு, சீர்திருத்தம், பகுத்தறிவு, தமிழ்மொழிப்பற்று, உலகக் கண்ணோட்டம், இயற்கையுணர்ச்சி முதலிய எடுத்துக் காட்டுப்பாடல்களையும் கோடிட்டுக் காட்டினபின்னரும் மக்கள் பாவலர் அவர் இல்லை என்றனர். பின்னரும், அவர் பாரதியாரைப் போன்று வாழ்க்கையில் துன்பப்படவில்லை என்றார்கள். நெடுநேரம் தருக்க முடிவிற்குப் பின்னர்தான் பாவேந்தரை மக்கள் பாவலர் என ஒத்துக்கொண்டனர். அஃதாவது திட்டமிட்டே பாரதிதாசனை மறைத்து விடுகிறார்கள்.

இது நிற்க, ஒருமுறை அக் கழக அன்பருக்கு இலங்கை நாளிதழ் "சுதந்திரன்" இதழ் கொடுத்துப் படிக்கக் கேட்டுக் கொண்ட போது, அதைப் படிக்காமலே மடக்கி வைத்துக் கொண்டு "இங்குள்ள தமிழர்கள் சிக்கலையே தீர்க்க முடியவில்லை, இலங்கைத் தமிழர்களின் சிக்கலைத் தீர்க்கப் போகிறார்களாம்" என்றார். ஒன்றையும் முழுவதுமாகப் படிப்பதே இல்லை. நாம் அவர்களின் முழுமையான செய்தியைப் படித்துவிட்டுத்தான் நன்று என்றால் நன்று என்றும், தீதாயிருந்தால் தீது என்றும் கூறுவோம். அரை குறையாய்ப் படித்து விட்டுத் திறனாய்வு செய்வதில்லை. இலங்கைத் தமிழர் சிக்கலைத் தெரிந்து கொள்ளாதவர்கள் தாம் உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள் என்பார்கள். இலங்கைத் தமிழர்களைப் பாட்டாளி மக்கள் இல்லை என்று கருதுகிறார்களோ, தெரியவில்லை. வெயிலிலும் மழையிலும், துன்பப்பட்டுப் பல்வேறு துயரங்கட்கிடையில் மூச்சுயிர்த்து உயிர் வாழ்கின்ற மலையகத் தமிழர்களுக்கு நம்மால் இரக்கம் காட்ட முடியாதா? அச் செய்தி இதழைக் கூடப் படிக்கக் கூடாதா? என்ன?

நாம் இவர்களுக்கு இறுதியாகக் கூறவிரும்புவது இதுதான். உண்மையான மக்களுக்கான கலை இலக்கியத்தை நாங்கள் மதிப்பவர்கள் தாம். வெறும் சிண்டு சிணுக்காக ஓரிரு வரிகளில் பிறமொழிகளைக் கலந்து எழுதுவதுதான் பாடல் என்றால், உங்களை நீங்களே அழித்துக் கொள்ளக் குழிதோண்டிவிட்டீர்கள் என்று தான் பொருள். நாங்கள் உங்களைப்பற்றித் திடுமெனத் திறனாய்வு செய்ய விரும்பவில்லை. அப்படிச் செய்யவும் மாட்டோம். நன்கு கூர்ந்து கவனித்த பின்னர் தாம் கூறுவோம்.

இந்தத் தமிழின நாட்டு மக்களை மறந்து விட்டு, தமிழ்ப் பெரியார்களை மறந்துவிட்டு, இம்மண்ணில் பொதுவுடைமை விளைச்சலைக் காண முடியாது. உலகத் தமிழின முன்னேற்றக்கழகத்தின் செயற்பாடுகளைப் பொறுத்திருந்துதான் கவனிக்க வேண்டும். திடுமெனத் தான்தோன்றித்தனமாக எல்லா இயக்கங்களையும் கண்டபடி கூறிவிடுவது நல்ல அணுகுமுறையன்று. இந்நாட்டு முன்னேற்றம் ஏதோ திடுமென இன்றோ நாளையோ ஏற்பட்டு விடுமெனவும் கருதிவிடக் கூடாது, நம்முடைய உண்மையான முயற்சி, உழைப்பு இவற்றில்தான் முன்னேற்றமே உள்ளதென அறிந்திடல் வேண்டும். 0

### உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும் பதிவு எண்: TN/MS(C) 657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்
திரு/திருவாட்டி
நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.